உண்டி உறைவிடப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் பெரும்பாலும் அங்கு தங்குவதில்லை. அவர்களது வீடுகள் அருகாமையில் இருப்பதால் வீட்டிற்குச் சென்று விடுகின்றனர். நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள்தான் அவ்விடுதிகளில் தங்கிப் பயில்கின்றனர். கிட்டத்தட்ட 48 விடுதிகள் தனியாக இருக்கின்றன. கிட்டத்தட்ட 320 பள்ளிகள் இருக்கின்றன. தற்போது பள்ளிக் கல்வித் துறையுடன் இந்தப் பள்ளிகள் இணைக்கப்பட்டதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தனியாக விடுதிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

காவிரி-வைகை-குண்டாறு இணைப்பு, திட்டப் பணிகளை விரைவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன், மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர், திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், (குறுக்கீடுகள்) திரு. கே.பி. முனுசாமி அவர்கள், திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள், திரு. M. ராஜமுத்து அவர்கள், திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள் மற்றும் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். இவர்களில் யாரேனும் ஒருவர் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவும். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

2023 ஏப்ரல் 1]

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி–வைகை–குண்டாறு இணைப்பு தொடர்பான திட்டப் பணிகளை விரைவுபடுத்த வேண்டியது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை, உறுப்பினர்களின் மேசையின்மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

காவிரி–வைகை–குண்டாறு வெள்ளநீர் இணைப்புக் கால்வாய் திட்டமானது கட்டளை (மாயனூர்) கதவணையிலிருந்து மொத்தம் 262.19 கி.மீ. நீளத்திற்குப் புதிய கால்வாய் அமைத்து, காவிரி ஆற்றினை அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறு, வைகை மற்றும் குண்டாறு ஆறுகளுடன் இணைக்கும் திட்டப் பணி 3 கட்டங்களாக நிறைவேற்ற திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக 0.00 கி.மீ. முதல் 118.45 கி.மீ. வரை பணிகள் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வெள்ளநீர்க் கால்வாய் அமைக்கும் பணிகள் 21–2–2021 அன்று துவக்கப்பட்டன. இத்திட்டத்தின் முக்கியத்துவம் கருதி 2021–2022 ஆம் ஆண்டு முதல், மாநில நிதியின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் பகுதி பணிக்கு ரூ.86.50 கோடியும் மற்றும் இரண்டாம் பகுதி பணிக்கு ரூ.91.18 கோடியும் செலவினம் மேற்கொள்ளப்பட்டு, 64 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 572.56 ஹெக்டேர் பட்டா நிலங்களும், திருச்சி மாவட்டத்தில் 200.40 ஹெக்டேர் பட்டா நிலங்களும் மற்றும் கரூர் மாவட்டத்தில் 427.81 ஹெக்டேர் பட்டா நிலங்களும் கையகப்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டும், சிறப்பு நில எடுப்புப் பணியாளர்கள் நியமித்தும், நில எடுப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இந்நில எடுப்புப் பணிகள் மாதாந்திர ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதன்மூலம், விரைவாக நடைபெறுவது உறுதி செய்யப்படுகிறது.

[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 1

இதுவரை, இம்மூன்று மாவட்டங்களிலும் 284.54 ஹெக்டேர் பரப்பு நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, எஞ்சிய நில எடுப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. ஒவ்வோர் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில், ஆண்டு இறுதியில் செலவினம் போக மீதமுள்ள நிதியினை இருப்பில் வைத்து கொண்டு, நில எடுப்புப் பணிகள் தொய்வில்லாமல் தொடர்ந்து நடைபெற அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் நிதியாண்டில், நிலமெடுப்புப் பணிகளுக்கு ரூ.554.17 கோடியும் மற்றும் நடைபெற்றுவரும் கால்வாய் அமைக்கும் பணிகளுக்கு ரூ.111.52 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். 2023-2024 ஆம் நிதியாண்டில் நில எடுப்புப் பணிகளுக்கு ரூ.554.17 கோடியும், கால்வாய்ப் பணிகளுக்கு ரூ.111.52 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அந்த விவரம் குறித்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் நிதிநிலை அறிக்கையிலோ அல்லது மானியக் கோரிக்கையிலோ இடம் பெறவில்லை. இந்த நிதி ஒதுக்கீடு ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.700 கோடிக்குள்ளானதா என்ற விளக்கத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

குறிப்பாக, இந்த காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டம் என்பது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமாகும். இன்றும் சொல்லப் போனால், தமிழ்நாட்டில் பெருந்தலைவர் ஐயா காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்து அனைத்து முதலமைச்சர்களும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கனவு கண்ட திட்டம். அனைவரும் நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணிய திண்ணியத் திட்டம். ஆனால், இந்தத் திட்டம் முதன்முதலாக ரூ.14,000 கோடி அளவில் estimate செய்யப்பட்டு, ரூ.6,941 கோடிக்கு Administrative sanction, நிர்வாக ஒப்புதலுக்கான அரசாணையை வழங்கி, ரூ.700 கோடியினை

2023 ஏப்ரல் 1] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]
Budget-ல் ஒதுக்கி, ரூ.331 கோடியினை 2 packages ஆக tender விடப்பட்டு, மிகச் சிறப்பாக 100 poclains வைத்து, விவசாயிகளின் மத்தியில் விவசாயிகளின் வாழ்த்துகளோடு, கரகோஷங்களோடு எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள், இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திட்டத்தைத் தொடங்கிவைத்தார்கள்.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வாருங்கள், ஆறு வெட்டப்படுவதைப் பாருங்கள், தாராளமாக நிதியைத் தாருங்கள் என்று அன்போடு அழைக்கின்றேன். காரணம், இன்றைக்கு இத்திட்டத்தில் நில எடுப்புப் பணிகளும், கால்வாய் வெட்டும் பணிகளும் மந்தமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இத்திட்டத்தினை உடனடியாக விரைவுபடுத்த வேண்டும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, இத்திட்டத்திற்கான சிறப்பு நிதியினை ஒதுக்க வேண்டும். ஏனென்றால் நெல்லும், வாழையும், மஞ்சளும், கரும்பும் விளைகின்ற பூமியைப் பார்க்கின்றபோது, என் போன்ற புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கும், விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களைச் சார்ந்தவர்களுக்கும், இதுபோன்ற திட்டம் எங்கள் மாவட்டத்தில் எப்போது வரப்போகின்றதென்று சிறிது ஏக்கமாக இருக்கும். எனவே, இது அத்தகைய ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமாகும். இத்திட்டத்தினை மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் தொடங்கிவைத்திருக்கிறார்கள்.

தற்போது மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் மூத்த அமைச்சராக உள்ளார். நீண்டகாலம் நீர்வளத் துறையை நிர்வகித்தவர். அவருக்கு நீரின் வாசனையும் தெரியும்; மண்ணின் வாசனையும் தெரியும்; விவசாயிகளின் கஷ்டங்களின் வாசனையும் தெரியும். மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் இத்திட்டத்தை எந்தவகையில் தொடங்கிவைத்து வரலாற்றில் இடம் பெற்றுள்ளாரோ அந்தவகையில், இத்திட்டத்திற்கான நிதியை தாராளமாகத் தந்து, இந்த நீண்ட தொடர் வரலாற்றில் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் பெருமையும் இடம் பெற வேண்டும் என்று இந்த நேரத்தில் அரசின் கவனத்தை ஈர்க்கிறேன். மேலும், புரட்சித் தலைவர். . .

[2023 ஏப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையாற்றியது போதுமே!

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அழகாகப் பாடியிருக்கிறார்கள்.

"நதியைப் போல் நாமும் நடந்து பயன்தர வேண்டும்,
கடலைப் போலே விரிந்த இதயம் இருந்திட வேண்டும்"

என்று பாடியிருக்கிறார்கள்.

அந்த விரிந்த இதயத்தோடு, நீங்கள் நிதியைத் தாருங்கள்; நில வளம் இருக்கிறது; நீர் வளமும் இருக்கிறது; அரசினுடைய பண வளம் மேலும் சிறப்பாக ஒத்துழைத்தால் எங்கள் மண் வளம் சிறக்கும் என்று ஒட்டுமொத்த விவசாயிகளின் சார்பில், என் சார்பாக மட்டுமல்ல, 7 மாவட்ட விவசாயிகளின் சார்பில் நான் கேட்கிறேன். இந்த காவிரி–வைகை–குண்டாறு இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். மேட்டூரிலே திறந்துவிட்டு கடலிலே வீணாகக் கலக்கின்ற நீரையெல்லாம் பார்த்தால் எங்களுக்கு கொஞ்சம் ஏக்கமாக இருக்கும்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: அந்த ஏக்கத்தைப் போக்குகின்ற அளவிற்கு, மூத்த அமைச்சர், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் இந்த வரலாற்றிலே இடம் பெற்று, விவசாயிகளினுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்றும், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார் போல, நீங்கள் இந்த நிதியைத் தந்து, திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, அரசினுடைய கவனத்தை மீண்டும் ஈர்க்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள் budget–ல் கொடுத்திருந்தார்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு budget–னினுடையது budget உடன்

2023 ஏப்ரல் 1] [பேரவைத் தலைவர்]

முடிந்துவிடும். இது மானியக் கோரிக்கையில் உள்ளதனால், உங்களுடைய பெயரைச் சேர்க்க முடியவில்லை. இருந்தாலும், நீங்கள் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவரென்பதால், அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

***திரு. மா. சின்னதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கை இது. 1933 ஆம் ஆண்டிலிருந்து துவங்கிய இந்தப் பணிகள் நடத்தப்படும் என்ற நம்பிக்கையோடு புதுக்கோட்டை மாவட்ட மக்கள் இருக்கிறார்கள். 1958 ஆம் ஆண்டில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அதற்கடுத்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டுகிறபோதுதான் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஆறு வரும் என்கிற ஒரு பெரிய நம்பிக்கை ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பின்னர் கிடப்பிலே போடப்பட்டது. பின்பு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலே அடிக்கல் நாட்டப்பட்டது. இன்றுவரை அந்தப் பணிகள் தொடங்கப்படாததால் மிகப் பெரிய ஏமாற்றமிருந்தது. இப்போது பணிகள் தொடங்கப்பட்டு 5 கிலோ மீட்டர் தூரம் வரை வாய்க்கால் வெட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஏழு மாவட்ட மக்கள் பயனடையக்கூடிய முறையில், 8½ இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறக்கூடிய முறையில், 15 நதிகளின் இணைப்பு ஏற்படக்கூடிய வகையில் காவிரி–வைகை–குண்டாறு இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களுக்குப் பிறகு, டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களின் வேகமான பேச்சைக் கேட்டேன். அவர் அமைச்சராக இருந்தபோது, நிச்சயம் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டிருப்பார். ஆனால், மிகவும் கெட்டிக்காரத்தனமாகப் பேசுவார். என்னமோ இந்தத் திட்டத்தை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் கொண்டு வந்ததைப் போலவும், வேறு யாரும் அதைப் பற்றி சிந்திக்காததைப் போலவும், அடடடடா (சிரிப்பு) (குறுக்கீடு) அதுதான் சார், நீங்கள் செய்யவில்லையென்று நான்*

[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 1

சொல்லவில்லை. நீங்கள் மட்டும் செய்ததுபோல் சொன்னீர்கள், அதற்காகத்தான். (சிரிப்பு) நீங்கள் என்ன செய்தீர்கள் என்று சொல்கிறபோது, நாங்கள் செய்ததையும் சொல்ல வேண்டுமல்லவா? நியாயமாக, இந்தத் திட்டம் எப்படி என்றால், National Water Development Agency என்று ஒன்று இருக்கிறது. அவர்கள் என்ன செய்தார்களென்றால், மகாநதியையும், குண்டாற்றையும் இணைப்பது என்று ஒரு திடீர் திட்டத்தைப் போட்டார்கள். அது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். மகாநதியையும், குண்டாற்றையும் இணைப்பது என்பது மிக, மிக risk; வேண்டாம்; இரண்டாக்கிவிடுவோம் என்று மகாநதியையும், கோதாவரியையும் இணைப்பது என்றும், கோதாவரியிலிருந்து குண்டாறு வரை இணைப்பதுபோல் வைத்தார்கள். அதையும் இணைக்கலாம் என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் வந்தபொழுதே, இது ஒரு நல்ல திட்டம், வரும்போது வரட்டும்; ஆனால், காவிரியையும், குண்டாற்றையும் இணைப்பதற்கு, நாம் அந்த வேலையைச் செய்யலாமென்று கலைஞர் அவர்கள்தான் முதன்முதலாக அதை நினைத்து (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக ஒரு கதவணையைக் கட்ட வேண்டும். மாயனூரில் bed regulator இருந்தது. முதன்முதலாக அந்தக் கதவணையை 165 கோடி ரூபாய் கொடுத்து, கட்டி, அங்கிருந்து குண்டாற்றிற்கு தண்ணீர் எடுத்துச் செல்வதற்கான வேலைகளைச் செய்தவர் கலைஞர்; கட்டியவன் அடியேன் துரைமுருகன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாமிரபரணி–கருமேனியாறு இணைப்பும் அதனுடன் சேர்த்துதான் அறிவிக்கப்பட்டது. தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்பும் இதனுடன் சேர்த்துதான் அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: ஆமாம். நம்ம Speaker எதுவாக இருந்தாலும், அவர் ஊர் பிரச்சினையைச் சொல்லிவிடுகிறார். (சிரிப்பு) 9–5–2008–ல் கலைஞர் ஆணையிட்டார்; 9–2–2009–ல் வேலையைத் துவக்கினோம். அதற்குப் பிறகு நீங்கள் வந்தீர்கள். அதன் பின்னர் 754 கோடி ரூபாயாக உயர்ந்தது. அதைக் கட்டி முடித்துவிட்டோம். கட்டி முடித்த பிறகு, அந்தத் திட்டம் வரும்போது வரட்டும், முதலில் 214 TMC நீர் கிடைக்கும் என்று சொன்னார்கள்.

2023 ஏப்ரல் 1] [திரு. துரைமுருகன்]

முற்பகல் 11–25

ஆந்திர மாநிலத்தில் மறுக்கிறார்கள், பின்னர், 84 டி.எம்.சி. என்று சொன்னார்கள். இவையெல்லாம் வேண்டாம். நீங்களும் சரி, நாங்களும் சரி, எது எப்படி இருந்தாலும் காவிரி–குண்டாறு இணைப்பதுதான் சரியாக இருக்கும் என்று முடிவுக்கு வந்து, அதற்கான திட்டமும் போடப்பட்டுவிட்டது. காவிரி–குண்டாறு இணைக்க வேண்டுமென்றால், முதலில் கால்வாய் வெட்ட வேண்டும். கால்வாய் வெட்ட வேண்டுமென்றால், நிலத்தை எடுக்க வேண்டும். நிலம் எடுப்பதற்கு, முதலில் பணம் வேண்டும். 1920 ஆம் ஆண்டு உங்கள் ஆட்சியில் இத்திட்டத்திற்கு நில எடுப்பிற்காக 600 கோடி ரூபாய் ஒதுக்கிக்கொடுத்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டது.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: I am sorry. *2020 ஆம் ஆண்டு உங்கள் ஆட்சியில் இத்திட்டத்திற்கு நில எடுப்பிற்காக 600 கோடி ரூபாய் ஒதுக்கினீர்கள். அதில் 34.31 கோடி ரூபாய் மட்டும்தான் செலவு செய்யப்பட்டது. மீதமுள்ள பணத்தை சர்க்கார், திரும்ப எடுத்துக்கொண்டது. அதுமட்டுமல்லாமல், இத்திட்டத்திற்காக, 71.60 ஏக்கர் நிலங்கள்தான் கையகப்படுத்தப்பட்டன. இதோடு உங்கள் வேலை முடிந்தது.*

2021–2022, 2022–2023 ஆகிய ஆண்டுகளில் 312 கோடி ரூபாயை இத்திட்டத்திற்காக நாங்கள் ஒதுக்கினோம். இதற்காக, 698.97 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) சரி, மீதமுள்ள பணத்தை உங்களைப்போல எங்கள் தளபதி ஆட்சியில், சர்க்கார் திரும்பப் பெறவில்லை. நம்முடைய தளபதி அவர்கள், மீதமுள்ள பணத்தை நீங்களே deposit *செய்துவைத்து, நீங்கள் நிலத்தைக் கையகப்படுத்த எப்பொழுதெல்லாம் பணம் தேவைப்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள் என உத்தரவிட்டுள்ளார். ஆக, நில எடுப்புக்கான பணத்தை* deposit *செய்து* ready-*யாக வைத்திருப்பது மாண்புமிகு தளபதியுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, 2023–2024 ஆம் ஆண்டில் நில எடுப்புப் பணிக்காக, 554.17 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது. நிலங்களை ஆர்ஜிதம் செய்து விட்டோம். இது நில எடுப்பு.*

[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 1

அடுத்து என்ன செய்வது, நில எடுப்புக்குப் பிறகு கால்வாய் வெட்ட வேண்டும். 2020–2021 ஆம் ஆண்டில் அதற்காக நீங்கள் ஒன்றும் செலவு செய்யவில்லை. எவ்வித கால்வாய் வெட்டும் பணிகளும் உங்களுடைய ஆட்சியில் நடக்கவில்லை. 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டுகளில் 177.9 கோடி ரூபாய் நாங்கள் கால்வாய் வெட்டும் பணிக்காகச் செலவு செய்திருக்கிறோம். இந்த இரண்டு ஆண்டுகளில் 64 சதவிகிதக் கால்வாய் வெட்டும் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. 2023–2024 ஆம் ஆண்டில் கால்வாய் வெட்டும் பணிக்காக 111.52 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கால்வாய் வெட்டும் பணிகள் வேகமாக நடந்துகொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், நிச்சயமாக தளபதியுடைய ஆட்சியில், காவிரி–குண்டாறு இணைப்பு நடைபெற்றே தீரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்

சுங்கக் கட்டண உயர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023–2024 ஆம் ஆண்டிற்கான மானிய (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களாலும் எதிர்க்கக்கூடிய ஒரு மோசமான செயல் இந்தச் சுங்கக் கட்டணக் கொள்ளை. இராப்பகல் கொள்ளையாக 6 மாதங்களுக்கு ஒருமுறை 10–லிருந்து 30 சதவிகிதம் வரை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். நீங்கள் பதிவு செய்து விட்டீர்கள். (குறுக்கீடு) மத்திய அரசு (குறுக்கீடு)

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 மாதங்களுக்கொருமுறை 10 முதல் 30 சதவிகிதம் வரை கட்டண உயர்வை அறிவித்து, உங்களில், தொடங்கி நான் வரை அனைவரிடத்திலுமே தொடர்ச்சியாக இந்தக் கட்டண வசூலில் ஈடுபடுகிறார்கள். ஆதலால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சுங்கக் கட்டணங்களை குறைப்பது குறித்து. . .